[9th November 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : அது இருக்கட்டும். மெர்க்காராவில் அதிக மழை பெய்தாலும் நமக்குத் தொந்தரவாக இருக்கிறது, இல்லை என்றாலும் தொந்தரவாக இருக்கிறது. பழைய காலத்தில் கட்டப்பட்ட மேட்டூர் டாம் மட்டும் நமக்குப் போதாது. அதற்கு மேலோ, கீழோ வேறு ஒரு அணையையும் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : மேட்டூருக்கு மேலே கட்ட முடியாது. கீழே கட்ட ஒப்பந்த அடிப்படையில் நடவடிக்கை
9-30 a.m. நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் கூட மீண்டும் பரிசிலனைக்கு வருகிறது. ஆகவே இப்போது அதைக் குறித்து அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை.

திரு. சா. கணேசன் : மேட்டூருக்கு மேலே ஹொகனேக்கல் போன்ற இடங்களிலே கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்து ஏற்பட்டு அது ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அப்படியானால் அந்தக் கருத்து சரியென்று சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இது மின்சார போர்டாரால் மின்சார உற்பத்திக்காக பரிசிலனை செய்யப்படுகின்ற திட்டம்.

Gang Mazdoors

* 564 *Q*.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to make permanent the gang mazdoors who have put in more than three or five years of continuous service in the department of Highways and Rural Works; and

(*b*) if so, whether effective and immediate steps will be taken to finalise the same ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

அரிசி விநியோகம்

* 565 **கேள்வி.—திரு. இரா. நாராயணன்** : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் நகரைச் சேர்ந்த (சர்வ கட்சிக்காரர்கள்) பொது மக்கள் சார்பில், திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்களை அரியலூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் மூலம் 25—7—1966 தேதியன்று ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுக்கு அரியலூர் பஞ்சாயத்திற்கு மட்டும் மாதம் 1,000 (ஆயிரம்) மூட்டை அரிசியாவது விநியோகம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்களா?